II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No.113 /2024**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : R.Swamikumar | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

வழக்குரை மற்றும் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூல சங்கதிகள் எனக்கு தெரியும். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். என் தந்தை ரமச்சந்திரனும் G.R. ரியல் எஸ்டேட் என்ற பெயரில் தொழில் செய்து வந்தார். 7ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரர். என் தந்தை இறந்த பிறகு எனக்கும் 7ம் பிரதிவாதிக்கும் இடையே சொத்து தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் தந்தைக்கு என் தாயார் 2ம் மனைவி என்றால் சரியல்ல. என் தாயார் மட்டும் தான் மனைவியாவார். என் தந்தைக்கு முதலில் ஜமிலா என்பவரோடு திருமணம் ஆகி அவர்களுக்கு, ஹசினா என்ற மகளும், சுலைமான் என்ற மகனும் உள்ளனர் என்றால் அது தொடர்பான வாரிசு உரிமை வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. என் தந்தையின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தையின் சரியான வாரிசு விவரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளோடு என் தாயார் ஒருகிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரிதான்.

அது சர்வே எண்கள். 228, 229, 230, 234 ஆகும். மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர், 62 1/2 செண்ட் ஆகும். அந்த கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி அல்ல என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தின் போது உடன் இருந்ததாக எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய தொகை எவ்வாறு கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த கிரைய ஒப்பந்தத்தில் 11 மாதம் கால அவகாசம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனை ஒப்புக்கொண்டு அதில் எனது தாயார் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த கால அவகாசத்திற்குள் கிரையம் செய்ய வில்லை என்றால் முன் தொகையை திருப்பி கொடுக்க வேண்டும் என அதில் சரத்துகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் குடும்ப திருமண செலவிற்காக தான் வழக்கு சொத்தை விற்க முன்வந்தனர் என்றால் எனக்கு தெரியாது. எனது பெற்றோர் இறந்த பிறகு நாங்கள் 1 முதல் 4 பிரதிவாதிகளை சந்திக்கவில்லை என்றால் சரியல்ல. எப்போது சந்தித்தோம் என்று ஞாபகம் இல்லை. அவர்களை சந்தித்ததாக வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர் இறந்த பிறகு எனக்கும் 7 ம் பிரதிவாதிக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தில் சரிபாதியை எனக்கு கிரையம் செய்து கொடுக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். 7 ம் பிரதிவாதிக்கு இந்த வழக்கு சொத்தை வாங்க விருப்பம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 7 ம் பிரதிவாதி பதில் அனுப்பவில்லை. வா.சா.ஆ.2 ஒப்பந்தம் என் தாயார் இறந்த பிறகு காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தத்தை நானோ, 7 ம் பிரதிவாதியோ நீட்டிப்பு செய்யவில்லை என்றால் பிரதிவாதிகள் என்னை

அணுகவில்லை நான் தயாராக தான் இருந்தேன். என் பெற்றோர் இறந்த பிறகு உடனடியாக பிரதிவாதிகளுக்கு எங்கள் தயார் நிலையை தெரியபடுத்தி அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை. அதன் பிறகு சட்ட அறிவிப்பு தான் அனுப்பினோம். நான் வழக்கு சொத்தை பாதி பிரிபடாத பாகத்தை பொருத்து ஏற்றதை ஆற்றுதல் பரிகாரத்தை கோரியுள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் நானும், 7ம் பிரதிவாதியும் இணைந்து கிரையம் செய்து கொள்வதாக தான் பரிகாரம் கேட்டிருக்கிறேன். எனது வழக்குரையில் வழக்கு சொத்தில் பாதி பிரிபடாத பாகத்தை பிரித்து எனக்கு பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்று தான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஏற்கனவே காலாவதியாகிவிட்டது என்றும் அதன் அடிப்படையில் பரிகாரம் கோர எனக்கு சட்டப்படி தகுதி இல்லை என்றாலும் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட முன் பணம் திருப்பி தரவேண்டிய தொகை இல்லை என்பதால் அதனை நான் கோர முடியாது என்றால் சரியல்ல. என் தந்தையின் வாரிசு நிலையை பற்றி பொய்யான சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறு க்கு விசாரணை–

5, 6 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாணை இல்லை.